DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI

**O.S. No. 59/2015**

Deposition of Witness : PW.1

| | |
|---|---|
| Name- திருமதி மீனாட்சி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **14.08.2019.**

*(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)*

**முதல் விசாரணை -**

நான் அசல் வழக்கில் வாதி. எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்களை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன்.

**சான்றாவணங்கள்**

1) கொடிவழி ஜாபிதா வாசாஆ.1.

2) சுப்ரமணியின் இறப்பு சான்றிதழின் அசல் வாசாஆ.2.

3) 27.3.2015 தேதியிட்ட வாரிசு சான்றிதழின் சான்றிட்ட நகல் வாசாஆ.3.

4) 10.7.2015 தேதியிட்ட சுப்ரமணி பெயரில் உள்ள வரி செலுத்தியதற்கான ரசீது அசல் வாசாஆ.4.

5) 11.7.2015 தேதியிட்ட எம்.எஸ்.முத்துகுமரேசன் அன்டு பிரதர்ஸ் பெயரில் உள்ள கிஸ்து ரசீது அசல் வாசாஆ.5.

6) 18.7.2015 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் ஒரு அஞ்சலக ரசீதுடன் வாசாஆ.6.

7) வாசாஆ.6ஐ 8வது பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வாசாஆ.7.

<u>1 முதல் 4 மற்றும் 7,9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை -</u>

எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனக்கு 1980-ல் திருமணம் நடந்தது. இந்த வழக்கை பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன். சம பங்கு கேட்டு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் பரம்பரை சொத்துக்கள் ஆகும். எனது தந்தை உயிரோடு இருக்கும்போது தனிப்பட்ட முறையில் சொத்துக்கள் எதுவும் வாங்கவில்லை. 4வது அயிட்ட தங்க நகைகள் எனது தாயாருக்கு பாத்தியப்பட்டது. எனது தாயார் 2013-ல் இறந்தார். எனது தாயாரின் நகைகள் சோமுவிடம் கொடுக்கப்பட்டிருந்தது. எனது தாயாரின் நகைகளை பற்றி எனது தந்தையிடம் கேட்டபொழுது சாமி கும்பிட்டவுடன் கொடுப்பதாகக் கூறினார். முதல் மற்றும் 2வது பிரதிவாதிகள் எனது மூத்த சகோதரர்கள். மற்ற பிரதிவாதிகள் எனது இளைய சகோதரர்கள். 1 முதல் 4 மற்றும் 7,9 பிரதிவாதிகள் எனக்கு தாவா சொத்தில் சம பங்கு கொடுப்பதற்கு சம்மதம் என்று பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தில் அவர்களுக்கும் சம உரிமை உள்ளது என்றால் சரிதான்.

**8வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

Sd./ G. Vijaya
முதன்மை மாவட்ட நீதிபதி
தேனி.